A9 4

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பேரூராட்சிகள் நிர்வாகம் – திரு. க. அச்சுதன் – வரித்தண்டலராக கருணையடிப்படையில் 12.01.2018 முற்பகல் முதல் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை</u>

**அரசாணை (3ப) எண்.25** **நாள்: 21.11.2019**

**(திருவள்ளுவர் ஆண்டு 2050**
**விகாரி, கார்த்திகை–5)**

· 014356

பேரூராட்சிகள் இயக்ககம்
06 DEC 2019
சென்னை-28

<u>படிக்கப்பட்டது:</u>

1. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.2904/2017/ப2, நாள்.10.01.2018.
2. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதம் ந.க.எண்.9478/2018/அ9 நாள்.10.08.2018.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.

*****

<u>ஆணை:-</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின்படி, திருநெல்வேலி மாவட்டம், சாம்பவர் வடகரை பேரூராட்சியில் செயல் அலுவலராகப் பணிபுரிந்தபோது 29.12.2016–ல் பணியிடைக் காலமான திரு. எம். கணேசன் என்பவரின் மகன் திரு. க. அச்சுதன் என்பவருக்கு கருணையடிப்படையில் வரித்தண்டலராக திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டு, 12.01.2018 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தனியரின் பணியினை அவர் வரித்தண்டலராகப் பணியில் சேர்ந்த நாளான 12.01.2018 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. மேற்காணும் சூழலில், திருநெல்வேலி மாவட்டம், சாம்பவர் வடகரை பேரூராட்சியில் செயல் அலுவலராகப் பணிபுரிந்தபோது 29.12.2016–ல் பணியிடைக் காலமான திரு. எம். கணேசன் என்பவரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையிலும், தனியரின் வயது மற்றும் கல்வித் தகுதி தொடர்பான ஆவணங்களை பரிசீலனை செய்ததின் அடிப்படையிலும் காலஞ்சென்றவரின்

/Attested/

Executive Officer
Special Grade Town Panchayat
Tisaiyanvillai-627 657

வாரிசான திரு. க. அச்சுதன் என்பவர் திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சியில் கருணையடிப்படையில் வரித்தண்டலராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட நிலையில், அவரது பணியினை, பணியில் சேர்ந்த நாளான 12.01.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யக் கோரும் பேரூராட்சிகளின் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, கருணை அடிப்படையில் வரித்தண்டலராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு. க. அச்சுதன் என்பவரது பணியினை 12.01.2018 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்கவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நடைமுறையிலுள்ள விதிகளின்படி வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அதனைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார் இதுகுறித்து உரிய பதிவுகள் தனியரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண். 18411/T1/2019-1, நாள் 30.09.2019-இல் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் அ.சா.எண்.32975/G2/2019-1, நாள் 09.10.2019-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஹர்மந்தர் சிங்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
திரு. க. அச்சுதன், திசையன்விளை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக).
பேரூராட்சிகளின் இயக்குநர்,
8வது தளம், நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28.
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம்
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)

<u>நகல் :-</u>
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநு.2) துறை,
சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

பிரிவு அலுவலர்

Attested

Executive Officer
Special Grade Town Panchayat
Tisaiyanvillai-627 657